மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, 1989ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 3ஆம் நாள், திங்கட்கிழமை காலை 9-00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-31 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

5. அவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

35. நகராட்சி நகரியங்களில் வரி விதிப்பு மேல்முறையீட்டு குழுக்களை அமைப்பது குறித்து நகராட்சி நிர்வாகம் — குடிநீர் வழங்கல் துறையின் 1988ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 25ஆம் நாளிட்ட 995ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1920ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் [தமிழ்நாடு சட்டம் 5/1920) 304(2) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

36. திருச்சி, ஹோலி பேமிலி ஹான்செனோரியத்திற்கு சொந்தமான சில வண்டிகளுக்கு சலுகை முறையில் வரிவிதிப்பது குறித்து உள் (போ. 1), துறையின் 1986ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 21ஆம் நாளிட்ட 3220ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1974ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வண்டிகள் வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25(2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

46. 1982ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 5 ஆம் நாளன்று பேரவை முன் வைக்கப்பெற்ற வீட்டுவசதி — நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 1981ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 13 ஆம் நாளிட்ட 179ஆம் எண் அரசாணைக்கான பிழை திருத்தம்.

47. 1982ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 7ஆம் நாளன்று பேரவை முன் வைக்கப்பெற்ற வீட்டுவசதி—நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 1981ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 10ஆம் நாளிட்ட 253ஆம் எண் அரசாணைக்கான பிழை திருத்தம்.